**செய்தி வெளியீடு எண்: 107** **நாள்: 12.02.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தால் நிர்வகிக்கப்படும் அரசு இ-சேவை மையங்களில் அசல் நிரந்தர ஆதார் அட்டைக்கு மாற்றாக பிளாஸ்டிக் ஆதார் அட்டை ரூ.30/- கட்டணத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) பிளாஸ்டிக் ஆதார் அட்டை அச்சிட்டு வழங்குவதை தடை செய்து அதன் விவரத்தினை தனது 6.2.2018 நாளிட்ட செய்திக் குறிப்பில் வெளியிட்டுள்ளது. எனவே இந்நிறுவனத்தின் அரசு இ-சேவை மையங்களில் பிளாஸ்டிக் ஆதார் அட்டை வழங்கும் சேவை நிறுத்தப்படுகிறது.

மேலும், இம்மையங்கள் பொதுமக்களின் ஆதார் அட்டையின் நகலை A4 தாளில் ரூ.12/-க்கு அச்சிட்டு வழங்கி வருகிறது. இச்சேவை தொடரும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**